பெறுநர்:
மதிப்பிற்குரிய திரு. செல்வகுமார் இ.ஆ.ப
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை
தமிழ்நாடு அரசு.

தமிழ் வரலாற்று ஆவணங்களை மின்னாக்கம் செய்வது, கல்வெட்டுப் பயிற்சிகள், வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்பு, வரலாற்று விழிப்புணர்வு, உலகளாவிய தமிழ் வரலாற்றுச் செயல்பாடுகள் என்ற முதன்மை நோக்கத்துடன் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு அதன் தலைவர் டாக்டர் க. சுபாஷிணி மற்றும் நண்பர்கள் சிலரால் 2001ல் துவக்கப்பட்டு, 2003ம் ஆண்டு முதல் இந்திய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்நாடு, மலேசியா, இலங்கை, ஜெர்மனி மற்றும் அமெரிக்க நாடுகளில் அரிய தமிழ் நூல்கள் ஓலைச்சுவடிகள், காகித ஆவணங்கள், கல்வெட்டுகள் போன்றவற்றை ஆவணப்படுத்தல், மின்னாக்கம் செய்தல், பாதுகாத்தல், பதிப்பித்து வெளியிடுதல் தொடர்பாகத் தனது பணிகளை முன்னெடுத்து வருகிறது.

உலகளாவிய வகையில் தமிழ் மொழி, வரலாறு நடவடிக்கைகளைக் கவனப்படுத்துதல் என்ற வகையில் பரிசீலனைக்காகச் சில கருத்துக்களைத் தங்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்கிறோம்.

உலகளாவிய நிலையில் தமிழ் மக்களின் தற்கால நிலையிலான மொழி, வரலாறு, பண்பாடு, பொருளாதாரம், வாழ்வியல் ஆகிய துறைகளில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்கான செயல்பாடுகள் அவசியமாகின்றன. இதற்கு அயல்நாட்டில் வாழும் எம்மைப் போன்ற தமிழ் செயல்பாட்டாளர்களும் மேலும் உலகளாவிய செயல்பாட்டாளர்களையும் இணைத்த வகையிலான ஆலோசனைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியத் தேவை எனக் கருதுகின்றோம். அதன் வழி கீழ்க்காணும் பல்வேறு செயல்பாடுகளை செயல்படுத்த வேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

குறிப்பு: ஆலோசனைக் குழு பரிந்துரைக்கும் செயல்பாடுகளைச் செயல்படுத்த முறையான வழிமுறைகளையும் இங்கு செயல்படுத்த வேண்டியதை உறுதி செய்ய வேண்டியது அவசியம்.

1. ஆவணப்படுத்தல் முயற்சியில் கல்வெட்டுகளைப் படித்தல், ஓலைச்சுவடிகளைப் படித்தல் போன்றவை முதன்மைத் தேவை என்பதை உணர்ந்தும், அத்துறையின் வல்லுநர்கள் அருகி வருவதைக் கருத்தில் கொண்டும் தமிழ் தொல் எழுத்துக்களையும் ஓலைச்சுவடிகளையும் படிப்பதற்காகத் துறைசார் அறிஞர்கள் உதவியுடன் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி அத்துறையில் பயிற்சி பெற்றோரை அதிகரிப்பதிலும் தொடர்ந்து செயலாற்றி வருகிறோம். இதன்

தொடர்ச்சியாக ஓலைச் சுவடிகளைப் படிப்பதற்கும் புத்தகங்களாக ஆக்குவதற்கும் தேவைப்படும் அறிஞர்கள் கொண்ட குழுவினைத் தமிழ் வளர்ச்சித்துறை அதிக எண்ணிக்கையில் பயிற்சி அளித்து நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அதற்கான பாடத் திட்டங்களைக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்வதையும், கணினி மூலம் படித்தலை எளிமைப்படுத்தும் வகையில் தொழில்நுட்பத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதை ஆலோசனையாக முன்வைக்கிறோம். இதனைச் செயல்படுத்தக் கீழ்க்காணும் செயல்திட்டத்தை முன்மொழிகின்றோம்.

அ. 1 மாத ஓலைச்சுவடி வாசிக்க அறிதல் பயிற்சி - தமிழ் வளர்ச்சித்துறையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எடுத்துக்காட்டாக..) அலுவலக வளாகத்தில் வாரத்தில் ஐந்து நாட்கள் என்ற வகையில் 4-6 மணி நேரங்கள் என்ற வகையில் இந்த வகுப்பு. இதில் கல்லூரி ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்குதல் .

ஆ. 2 மாத கால வார இறுதி நாட்கள் இணைய வழி ஓலைச்சுவடி வாசிக்க அறிதல் பயிற்சி - வார இறுதிகளில் உலகளாவிய தமிழ் ஆர்வலர்கள் பங்கெடுத்துப் பயன்பெறும் வகையில் 4-6 மணி நேரங்கள் ஒரு வார இறுதி என்ற அடிப்படையில் இந்தப் பயிற்சியை வழங்குதல்.

2. தமிழ் மெய்நிகர் அருங்காட்சியகம் – Artificial intelligence, 360 degree camera -virtual tour, Virtual Reality போன்ற தொழில்நுட்ப உதவியுடன் மெய்நிகர் அருங்காட்சியகங்களை உருவாக்க வேண்டுவதும் தற்கால தேவைக்கேற்ற செயல்பாடுகளாக அமைகின்றன.

3. தமிழ் வரலாற்று நோக்கில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழ் ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் தமிழ், தமிழரின் கலைகள், நிகழ்த்து கலைகள், நுண்கலைகள், இலக்கியம், இலக்கணம், வரலாறு, வாழ்வியல், பண்பாடு, கல்வி, மருத்துவம், அறிவியல், கட்டுமானங்கள், பண்டைய அயல்நாட்டு வாணிகத் தொடர்புகள், போர்முறைகள், வழிபாட்டு முறைகள், தொல்லியல் என்ற பல துறைகளில் ஆவணப்படுத்தும் பணிகள் நம்முன் நிறைந்துள்ளன. இவற்றுக்கான முறையான திட்டமிடுதலை தொடங்குதல்.

4. புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான ஒரு சிறப்புத் துறையை உருவாக்குதல் – இதன் வழி
அ) தமிழ் மற்றும் வரலாற்று ஆவணப்படுத்தல்
ஆ) பொருளாதார வணிக முயற்சிகளை நெட்வெர்க்கிங் வகையில் உறுதி செய்து பொருளாதார மேம்பாடு தொடர்பான செயல்பாடுகளைத் தொடங்குதல்
இ) கணினி மென்பொருள், Artifical Intelligence, கணினி வர்த்தகத்துறை தொடர்பான முயற்சிகளை ஒன்றிணைத்தல், புதிதாகத் தொடங்குதல்

ஈ. மீடியா, கலைத்துறை, சினிமா -ஆகிய வகைகளில் உலகளாவிய தமிழர்களின் தொடர்புகளை உருவாக்குதல்

5. தமிழக வட்டாரக் கோயில்களின் வரலாறு, அங்கு நிலவும் வழிப்பாட்டு முறைகள், விழாக்கள் ஆகியவற்றையும் பதிவு செய்தல் வேண்டும். தற்சமயம் உள்ளவை பதிவுப் பட்டியலாக உள்ளதேயன்றி அவற்றின் தகவல்களை முழுமையாக ஆவணப்படுத்தவில்லை. உதாரணமாக: http://www.tamilvu.org/library/thirukkovil/Villupuram/Form1.html.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட துறைசார் வல்லுநர்களுக்கு கல்விச்சுற்றுலா என்ற வகையில் ஐரோப்பிய அமெரிக்க அருங்காட்சியகங்கள் பல்கலைக்கழக வரலாறு மற்றும் தொல்லியல் துறைகளைச் சென்று காணுதல் என்பவை அடங்கும் வகையில் இத்திட்டத்தை உருவாக்கலாம்.

7. புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்பாளர்களுக்கு, உலக அளவில் முன்னிறுத்த, தகுந்த அங்கீகாரம் பெற, திட்டம் தேவைப்படுகின்றது. தமிழ் வளர்ச்சித்துறை அலுவலக வளாகத்தில் கண்காட்சிகள் வைத்தல் மட்டுமன்றி உலகளாவிய அளவில் இந்தக் கண்டுபிடிப்புகள் பரவலாக்கம் பெற உதவுதல்.

8. பொருளாதார வருவாயின்றி மெல்ல மெல்ல அருகி வரும் நிகழ்த்துகலைகள், கைத்தொழில்கள் என யாவற்றிலுமே தமிழின் பண்பாட்டுக் கூறுகள் நிறைந்துள்ளன. இவை இத்தலைமுறையோடு மறையாமல் இருக்க பொழுதுபோக்கிற்காக கற்கும் மரபுக் கலை என்ற நோக்கில், பலருக்குக் கற்பிக்கும் பயிற்சி வகுப்புகளை மேற்கொள்ளுதல் கலைஞர்களுக்கும் வாழ்வளிக்கும், கலையையும் பலதலைமுறைகளுக்குக் கடத்தும் வாய்ப்பையும் அளிக்கும்.

9. தமிழ் மரபு அறக்கட்டளை 2016ம் முதல் பிரான்சு, டென்மார்க், ஜெர்மனி ஆகிய நாடுகளின் ஆவணப்பாதுகாப்பகங்களில் மின்னாக்கம் செய்த ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்து ஆவணங்கள் மின் கோப்புக்களாக உள்ளன. இவற்றை வாசித்து இக்காலத் தமிழுக்குக் கொண்டு வந்து அவற்றை நூல்களாகப் பதிப்பிக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

10. ஐரோப்பிய நாடுகளில் பாதுகாக்கப்படும் தமிழ் ஆவணங்களை மின்னாக்கம் செய்து அவற்றை ஆய்வு செய்யும் சிறு குழு ஒன்றை அமைத்தல், அதனைச் செயல்படுத்தல் பற்றிய கலந்துரையாடல் தேவைப்படுகிறது.

11. தமிழகத்தின் ஒவ்வொரு தெருவும் ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ் மரபு அறக்கட்டளை "நம் ஊர் நம் பெருமை" என்ற வகையில் தமிழகத்தின் ஊர்கள் பலவும், அவை கொண்டிருக்கும் வரலாற்றுச் சின்னங்களும் இணையவழியாக எவரும் அறியும் வகையில் பதிவு செய்யப்படல்

வேண்டும் என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளோம். தமிழ் வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலுடனும் ஆதரவுடனும் இத்திட்டத்தை தமிழ்நாடு முழுமைக்கும் செயல்படுத்த திட்டமிடலாம்.

12. தமிழ்நாட்டின் ஒவ்வொரு நகரமும் ஒரு தனிச்சிறப்பு கொண்டது. நகரங்களின் வரலாற்றை ஆவணப்படுத்துவோம் என்ற திட்டம் 2018ம் ஆண்டு தமிழ் மரபு அறக்கட்டளை தொடங்கியது. இத்தகைய திட்டத்தில் சென்னையின் வரலாறு குறித்து ஆவணப்படுத்தும் முயற்சியில் பல தகவல்களைச் சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளது (https://www.digital-madras.tamilheritage.org/). இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணையாகப் பணியாற்றவும் ஆர்வம் கொண்டுள்ளோம். இதன்வழி சென்னை மட்டுமன்றி ஏனைய அனைத்து நகரங்களின் வரலாற்றையும் ஆவணப்படுத்தும் திட்டத்தில் உதவக் கோருகின்றோம்.

13. பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருக்கும் மார்டினிக், குவாதலூப் (Martinique,Guadeloupe) போன்ற கரீபியன் பகுதி தீவுகளில், 18ஆம் நூற்றாண்டுகள் முதல் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அங்கு வாழும் இக்காலத் தலைமுறையினரான தமிழர்கள், மறந்துவரும் தங்கள் தமிழ் மரபுகளை மீளமைக்கும் வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. தமிழ் மரபு அறக்கட்டளை இது தொடர்பாக ஒரு வார கால 'தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுத்தல்' என்ற திட்டத்தினை உருவாக்கியுள்ளோம். இதனைச் செயல்படுத்த இணைந்து செயலாற்றக் கூடிய செயல்முறைகளைக் கலந்துரையாடி செயல்படுத்த முயற்சிகளைத் தொடங்கலாம்.

14. புலம் பெயர்ந்த கடந்தகாலத் தமிழர்களின் வாழ்வியல் தரவுகள் ஆவணப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம். குறிப்பாகக் கூலித் தொழிலாளர்களாகப் புலம்பெயர்ந்து உலகின் பல நாடுகளிலும் தீவுகளிலும் வாழும் மக்களின் புலம்பெயர்வு ஆவணப்படுத்தல் அவசியமாகின்றது.

அ. மலேசியா சிங்கை புலம்பெயர்வு – ஆவணப்படுத்தல் முயற்சி

ஆ. கடந்த 300 ஆண்டுக் கால விரிவான பிரெஞ்சுத் தீவுகளுக்கான தமிழர் புலம்பெயர்வையும் அயலகத் தமிழர்தம் வாழ்வியல் வரலாற்றையும் ஆவணப்படுத்தும் முயற்சி

இ. கடந்த நூற்றாண்டில் உலகம் தழுவிய தமிழ் மக்களின் விரிவான புலம்பெயர்வு

15.உலகின் பல நாடுகளில் தமிழ் நூல்கள் கண்காட்சியை ஏற்படுத்தி அயலகத்தில் தமிழ் நூல்கள் வாசிப்பிற்கு உதவும் அதே வேளை தமிழ் நூல்கள் வணிக முயற்சிக்கும் உதவுவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணுதல்.

16. உலகெங்கிலும் இன்று தமிழ் மக்கள் செயல்படுகின்ற தமிழ் அமைப்புகள் ஏராளமாக உள்ளன. உலகத் தமிழ் அமைப்புக்களின் தகவல் வங்கியை இணையத்தில் உருவாக்கும் திட்டத்தைத் தமிழ் மரபு அறக்கட்டளை உலகத் தமிழர்நாள் விழாவில் 12.1.2021 முன் வைத்தோம். இதனை நடைமுறைப்படுத்தி செயல்படுத்த இணைந்து செயலாற்றக் கூடிய செயல்முறைகளைக் கலந்துரையாட நாடுகின்றோம். இதன்வழி உலகத் தமிழ் அமைப்புக்களை ஒரு குடையின்கீழ் ஒருங்கிணைத்துத் தொடர்பினை உண்டாக்க இயலும்.

மேற்கண்ட செயல்பாடுகளுக்கு எமது ஒத்துழைப்பினை உலக அளவில் உருவாக்கித் தருவதற்கு எமது தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பும் அதன் செயற்பாட்டாளர்களும் தயாராகவும் மகிழ்வுடனும் காத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழால் இணைவோம்.

நன்றி,
அன்புடன்

முனைவர்.க.சுபாஷிணி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
https://www.tamilheritage.org/
ஜூன் 8, 2023

Tamil Heritage Foundation International (THFi) is a non-profit organization, with a global initiative to preserve and understand Tamil heritage in Digital Media.
Registered under Trust act in Chennai, Tamil Nadu, India ( Reg. No.98/2019);
Malaysia PPM-030-05-26102015;
Registered under Germany Registration Act Tamil Heritage Foundation International e.V. (VR 723912).